OS 49/2021

வா.சா.1 திரு. பாலமுருகன் த/பெ. சுந்தரம்

நாள்: 10.09.2025

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் என்ன உறவு முறை என்றால் பங்காளி உறவுமுறை ஆகும். 02.03.2005 ம் தேதி ரூ.20 ஆயிரம் கடன் வாங்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் வேணுகோபால், வெங்கடேசன் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நானும் இருந்தேன். பிரதிவாதிகளும் இருந்தார்கள். எந்த இடத்தில் பணம் கொடுக்கப்பட்டது என்றால் கண்ணமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. அது என்ன பத்திரம் என்றால் அடமானம் பத்திரம் ஆகும். பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். 29.01.2007 ம் தேதியன்று ஆவணம் எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், என் அம்மாவும் இருந்தோம். ரூ.25 ஆயிரம் என்று எழுதப்பப்பட்டுள்ளது என்றால் அதிகப்படுத்தி கேட்டார்கள்.

2. 13.06.2012 ம் தேதியிட்ட பைசல் ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். யார் பைசல் செய்தது என்றால் அது போன்று எதுவும் எழுதி தரவில்லை. 13.06.2012 ம் தேதி நானும், வெங்கடேசனும் ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் பதிவெண் சொல்லமுடியுமா என்றால் ஆவண எண்.2028 நாள்.13.06.2012 ஆகும். எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்றால் ரூ.4 இலட்சத்துக்கு போடப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் ஆவண எண். 88/2007 என்று சொல்லப்பட்டுள்ள ஆவணம் என்ன ஆவணம் என்றால் தெரியாது.

3. மேற்படி கிரைய ஒப்பந்தம் போடும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் வெங்கடேசன், சரளா, ரேகா, நிஷாந்தி. புகழேந்தி மற்றும் நான் இருந்தேன். 13.06.2012 ல் ரொக்கப்பணமாக ரூ.2 இலட்சம் கொடுக்கப்பட்டது. 29.01.2007 ம் தேதியிட்ட அடமான கடன் ரூ.25 ஆயிரம் மற்றும் 01.04.2011 ம் தேதி புரோநோட்டு மூலம் ரூ.1,20,000/- க்கும் சேர்த்துகிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. வெங்கடேசன் கையொப்பம் செய்யும்போது கிரைய ஒப்பந்தம் என்று சொன்னேனா என்றால் அவர் படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தார். அவரது குடும்ப உறுப்பினர்கள் படித்து காண்பித்தார்கள்.

4. ஆவண எண்.6648/2007 என்ற ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 20.12.2017 ம் தேதி ஒரு உடன்படிக்கை உறுதிமொழி எழுதியபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் சரளா, ரேகா, புகழேந்தி ஆகியோர் இருந்தார்கள். அதில் போடப்பட்டுள்ள ரூ.3,90,000/- என்பது என்ன கணக்கு விவரம் என்றால் 19.01.2015 ல் ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்தேன்.அதில் ரூ.6,99,000/- கணக்கு செய்து அதில் ரூ.3,09,000/- கொடுத்துவிட்டார்கள். மீதி ரூ.3,90,000/-க்கு

நான் உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்தேன். 19.01.2015 முதல் 20.12.2017 வரை வட்டி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ல் உள்ள விவரத்தை பிரதிவாதிகளுக்கு படித்து காண்பித்தேனா என்றால் படித்து காண்பித்தேன். வா.சா.ஆ.5 உறுதி மொழி பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகின்றது.)